**செய்தி வெளியீடு எண்: 806** **நாள் : 21.09.2010**

# <u>கடைசி வாய்ப்பு – தவற விட வேண்டாம்</u>

## <u>2006, 2007, 2008 மற்றும் 2009–ம் ஆண்டுகளில் புதுப்பிக்காதவர்கள் சிறப்பு புதுப்பித்தல் சலுகையின்படி புதுப்பித்துக் கொள்ள வேண்டுகோள்</u>

2006, 2007 மற்றும் 2008–ம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு முறை புதுப்பித்தல் சலுகையும், 2009–ம் ஆண்டு புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்புப் புதுப்பித்தல் சலுகையும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்புப் புதுப்பித்தல் சலுகையால் 31.08.2010 வரை 90,153 நபர்கள் பயன் பெற்றுள்ளனர். இந்த புதுப்பித்தல் சிறப்புச் சலுகையைப் பெற்றிட 04.10.2010 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வாய்ப்பினைத் தவறவிடாது மேற்படி ஆண்டுகளில் தங்களின் பதிவைப் புதுப்பிக்காதவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு உரிய படிவத்தில் வேலைவாய்ப்புப் பதிவு அடையாள அட்டையின் நகலுடன் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமோ மனுச் செய்து தங்களின் பதிவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி மீண்டும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் திரு.ஆ.சு.ஜீவரத்தினம், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஆ.சு.ஜீவரத்தினம், இ.ஆ.ப.,
ஆணையர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
கிண்டி,சென்னை–32.

**வெளியீடு:–**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**